பக்கங்கள்:-18

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவ ஆண்டு 2054 | ஆடி 17 | புதன்கிழமை 02.09.2023 | அதிர்வு 01 |
|---|---|---|---|---|


## சம்பந்தன் 'சமஷ்டி' கேட்டால் மீண்டும் இரத்தக்களரி ஓடும்!

### மிரட்டுகின்றார் கம்மன்பில

"சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமஷ்டி வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தால் இந்த 04▶

# ஈழத்து இளைய தலைமுறையின் ஒரே அபிலாஷை புலம்பெயர்வதே!

## அரசியல் தலைமைகளின் தோல்வி இது என யாழ்ப்பாணத்தில் மனோ கணேசன் காட்டம்

- எஸ்.நிதர்சன் -

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 02

"வெளிநாட்டுக்குச் செல்வதுதான் தமது ஒரே அபிலாஷை என ஈழத்து இளைய தலைமுறை கருதும் பேரவல நிலைமை இன்று ஏற்பட்டிருக்கின்றது என்பதுதான் உண்மை. எனக்குத் தெரிந்தவரையில் அது தான் இங்கு நடக்கிறது. இளையோர் இல்லாத சமுதாயமாக - இளையோர் தளர்ந்து போகின்ற சமுதாயமாக - எனது ஈழத் தமிழர் உடன்பிறப்புகளின் இனம் உருமாறிவிடுமோ என்ற அச்சம் எனக்கிருக்கின்றது. அந்தப் பயம் ஏற்பட்டுள்ளது. மனப்பூர்வமாக அச்சப்படுகிறேன். இவ்வாறு வெளிநாடு செல்வதுதான் அவர்களது சிந்தனையாக இருக்கிறது. இது (தமிழ்)அரசியல் தலைமைகளின் தோல்வி."

- இப்படி யாழ்ப்பாணத்தில் வைத்து, திரண்டிருந்த வடக்குப் பிரமுகர்களின் முன்னிலையில் பகிரங்கமாகக் கூறினார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன். 03▶



# தமிழ்ப் பேசும் இனங்களுக்கு மத்தியில் பரந்து பட்ட ஒற்றுமை இன்று அவசியம்

## யாழ்ப்பாணத்தில் வைத்து வலியுறுத்துகின்றார் ஹக்கீம்



– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்02

"இன்றைய அரசியல் சூழலில் தமிழ்ப் பேசும் இனங்களுக்கு மத்தியில் பரந்து பட்ட ஒற்றுமை மிக மிக முக்கியமானது."

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு வலியுறுத்தினார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.வித்தியாதரநின் வழிகாட்டலில் பிரசுரமாகும் 'முரசு' மின்னிதழ் வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலைய மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற போது அந்நிகழ்வில் பிரதம அதிதிகளில் 06▶

# வித்தி தந்த செய்தியை ரணில் கேட்டிருந்தால் 2005இலேயே அவர் ஜனாதிபதியாகியிருப்பார்

### பழையதை நினைவூட்டுகிறார் மனோ கணேசன்

வித்தி (கொண்டு வந்து) தந்த செய்தியை ரணில் விக்கிரமசிங்க கேட்டிருந்தால் 2005 இலேயே அவர் ஜனாதிபதியாகியிருப்பார் என்று பழைய விடயங்களை நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து நினைவூட்டினார் மனோ கணேசன் எம்.பி.

'முரசு' வெளியீட்டு 05▶

# இன விடுதலைக்காக ஐக்கியம் பேணுவோம்

### 'முரசு' வெளியீட்டில் மாவை அழைப்பு



– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 02

தமிழினம் தொடர்ந்தும் பல வழிகளிலும் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் அவற்றுக்கு எதிராக அடக்குமுறை நீடிக்கின்ற நிலைமையே உள்ளதாகத் 04▶



## இ(ப)ரகசியம்

'இரகசியம்' அம்பலமானால் அதன் பின் அது 'பரகசியம்' தானே...!

எனக்குத் தெரிந்த இரகசியங்களை – மறைவான தகவல்களை – விசேடமான புதினங்களை – வாசகர்களுடன் பகிர்ந்து 05▶

# தமிழரின் வாழ்வாதாரத்தை சிதைத்தழிக்கின்றது அரசு

## சீறுகின்றார் ரவிகரன்

தமிழர்களின் வாழ்வாதாரத்தைச் சிதைக்கும் நோக்கோடு அரசு செயற்பட்டு வருகிறது என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார்.

'மகாவலி எல்' வலயம் என்னும் பெயரில் ஆக்கிரமிப்புக்கள் இடம்பெறுகின்றன என மக்களால் தெரிவிக்கப்பட்டமையை யடுத்து குறித்த பகுதிக்கு களவிஜயம் மேற்கொண்டிருந்த ரவிகரன்அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் அக்கரவெளி மற்றும் மணற்கேணி ஆகிய பகுதிகளில் காணி அபகரிப்பு நடைபெறுவதாக ஏற்கனவே சுட்டிகாட்டியிருந்தோம்.

தற்போது அக்கரவெளி பகுதியில் தமிழர்கள் வாழ்வாதாரத்திற்காக பயன்படுத்தப்பட்ட பூர்வீகக் காணிகளை மக்கள் சென்று பார்த்த போது வன இலாகாவினுடைய பொறுப்பில் இருந்த காணிகள் மகாவலிக்கு விடுவித்து கொடுத்திருக்கிறார்கள்.



11 சிங்கள மக்களுக்கு தலா 25 ஏக்கர் படி வழங்கப்பட்டுள்ளதாக அறியக்கூடியதாக உள்ளது. இவ்வாறு கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுகேணி போன்ற ஆறு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள ஏற்கனவே மகாவலி எல் திணைக்களமானது, மக்களிடம் எத்தனை ஏக்கர் இருந்தாலும் இரண்டு ஏக்கர் வீதம் தான் தரமுடியும் என கூறிய போது தங்களுடைய காணிகள் தங்களுக்கே வேண்டும் என விட்டுக் கொடுக்காது இருந்தார்கள்.

இவ்வாறு இருக்கும் போது தமிழர்களுடைய பூர்வீகக் காணிகள், வாழ்வாதாரத்திற்கு பயன்படுத்தப்பட்ட காணிகள் எங்களுக்கோ, மாவட்ட செயலகத்திற்கோ, பிரதேச செயலகத்திற்கோ தெரியாமல் மகாவலி எல் என்ற அதிகார சபையின் ஊடாக கொழும்பில் உள்ள சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன எனில் இதனை யாரிடம் முறையிடுவது?

மக்கள் வாழ்வாதாரத்திற்காக எங்கு சென்று முட்டிக்கொள்வது? இவ்வாறு கொடுமையான வேலையை செய்து கொண்டிருக்கிறார்கள். இதனை இலகுவான முறையில் வனவளதிணைக்களமானது மகாவலி அதிகார சபைக்கு விடுவித்துக் கொடுத்திருக்கின்றது.

மகாவலி சபை எங்கோ இருக்கின்ற சிங்கள மக்களுக்கு அவற்றைக் கொடுக்கின்றது. எங்களுக்கு அருகாமையிலுள்ள காணிகள் விடுவிக்கப்படவில்லை. கிட்டத்தட்ட 1500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் வனவளத்திணைக்களத்திடம் இருந்து பெற்று சிங்கள மக்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மகாவலி அதிகார சபை மேற்கொள்வதாக மக்களாலும், அதிகாரிகளாலும் அறியக்கூடியதாக உள்ளது.

தமிழ் மக்கள் தங்கள் சொந்தக் காணிகளில் விவசாயம் செய்ய முடியாத வகையில் இலங்கை அரசாங்கம் , தமிழ் இனத்தை அழிக்கும் நோக்கோடும்,வர்களின் வாழ்வாதாரத்தைச் சிதைக்கும் நோக்கோடும் செயற்பட்டு கொண்டு வருகின்றது என்பதனை சுட்டி காட்டுகின்றோம்.

இதற்கான சரியான தகவல் கிடைத்ததும் அதற்கு எதிராக ஒரு போராட்டத்தை மேற்கொள்வோம் என்பதை கூறிக்கொள்கின்றேன். - இவ்வாறு ரவிகரன் தெரிவித்துள்ளார்.

# அரசுக்கு விரைவில் 'பேரிடி'

## சஜித் ஆருடம்



'அரசு எப்போதும் மக்களுக்குச் சார்பான செயற்பாடுகளையேயன்றி மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளையே செய்து வருகின்றது. அதன் விளைவுகள் அரசுக்குப் பேரிடியாக விழும் நாள் வெகுதொலைவில் இல்லை" - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

'குளிரூட்டி அறைகளில் இருந்து அரசு எடுக்கும் தன்னிச்சையான முடிவுகளால் பாரிய அனர்த்தம் ஏற்படுவதைத் தடுக்க முடியாதுபோகும்.

உரத்துக்குத் தடை விதித்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த தன்னிச்சையான முடிவுகளை அரசு நினைவுகூர வேண்டுமென நினைவூட்டுகின்றோம்.

நாடு மிக மோசமான நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இவ்வேளையில், நாடு முழுவதும் சோறு போடும் விவசாயிகளின் வாழ்வோடு விளையாடுவதால் ஏற்படும் விளைவுகளை அரசு மட்டுமல்லாது நாடு முழுதும் அனுபவிக்க நேரிடும்.

இது நாட்டின் விவசாயத்தை முடக்குவதற்கு எடுக்கும் அரசின் நுட்பமான மற்றும் தந்திரமான முயற்சியா எனவும் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

விவசாயிகளை மேலும் ஏமாற்றாமல் அவர்களின் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான தண்ணீரை அரசு திறந்துவிட வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.' - என்றார்.

# தென்னிலங்கையில் இருவர் நேற்றிரவு வெட்டிக்கொலை!

## காதல் சண்டையே காரணமாம்

குழு மோதலில் இருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் காலி - நியாகமை பிரதேசத்தில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

34 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரும், 28 வயதுடைய இளைஞர் ஒருவரும் இந்தச் சம்பவத்தில் சாவடைந்துள்ளனர்.

காதல் விவகாரத்தால் இந்த மோதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## ஈழத்து இளைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மூத்த ஊடகவியலாளர் வித்தியாத ரனின் வழிகாட்டுதலில் வெளியாகும் "முரசு" மின்னிதழின் முதலாவது பிரசுர நிகழ்வு யாழ் கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற போது அதில் பிரதம அதிதிகளில் ஒரு வராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

ஊடகவியலாளர் வித்தியாதரனை 'வித்தி' என்று சொல்லாமல் 'கத்தி' என்று தான் நாங்கள் சொல்லுவோம். ஏனென் றால் அவர் கத்தியின் மேல் நடப்பவர் என்பதும் நன்றாகத் தெரியும். இப்பொழுது இங்கு பேசும் பொழுது அவரைப்பற்றி வேறுவிதமாகச் சொன்னார்கள். அவரும் அதைப்பற்றிச் சொல்லியிருந்தார். குறிப் பாக அவர் ஒரு சிறந்த 'கோல் கீப்பர்' என்று இங்கு சொல்லப்பட்டது.

கிரிக்கெட் விளையாட்டில் விக்கெட் கீப்பர் என்று சொல்லுகிற பொழுதும் அதில் விளையாடும் 11 பேரில் அவர் ஒருவர்தான் கீப்பர். மற்றையவர்கள் விளையாட்டு வீரர்கள்தான். அதே மாதிரி கால்பந்தாட்ட அணியிலும் அவர் கோல் கீப்பர்தான். அப்படியே தொடர்ந்து கீப் பராகவே நீங்கள் இருங்கள். கப்ட னாக வேண்டிய தேவையே கிடையாது. நீங்கள் எப்போதும் கீப்பராகத்தான் இருக்க வேண்டும்.

அப்படி ஏன் சொல்லுகிறென் என்றால் சந்திரன் போன்று, ஒரு நிலா போன்றே நீங்களும் இருக்கின்ற நிலையில், இது வொரு புதிய முயற்சியை எடுத்துள்ளீர்கள். ஆகவே நீங்கள் அணித் தலைவராக முயற்சி செய்யாதீர்கள். உங்களுக்கு இங்கே (ஊடகத் துறையில்) நிறையப் பணிகள் இருக்கின்றன என்று நினைக்கி றேன். அதையே தொடர்ந்து செய்யுங்கள். இதைச் சொல்லிப் போகத்தான் நான் ரவூப் ஹக்கீமுடன் சேர்ந்து ரயில் பிடித்து இங்கே வந்திருக்கின்றேன்.

இங்கு உங்கள் இதழ் மின்னி மறைந் தது. அதிலே சம்பந்தன் அவர்கள் ரணி லுடன் இனிமேல் நேரடியாகப் பேசப் போகி றார் எனச் சொல்லியிருக்கின்றார். ஆனால் ரணிலுடன் ஒருநாளும் அப்படி பேச மாட்டார். அப்படிப் பேசவும் முடியாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

இப்பொழுது ரணில் விக்கிரமசிங்கவி டமும் நான் பல தடவைகள் ஒரு விட யத்தைக் கூறியிருக்கிறேன்.

அதாவது வடக்கு, கிழக்கில் முதற்கட் டமாக மாகாண சபைத் தேர்தலை நடத் துங்கள் என்று சொல்லியிருக்கிறேன். தமிழ் பேசும் இனங்கள் என நாங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து ஒரு முகாம் அமைத்து ஒன்றாகச் செயற்பட வேண்டும். ரவூப் ஹக்கீமும் அதைச் சொல்லியி ருக்கின்றார்.

இங்கு இந்தியத் தூதரக அதிகா ரிகளும் இருக்கின்றார்கள். தமிழ் முற் போக்கு கூட்டணியாக நாளை மறுநாள் நாங்களும் இந்தியத் தூதுவரைச் சந் திக்க இருக்கிறோம். பல தடவைவகள் சொன்னது போன்று தேர்தலை நடத்த வேண்டுமென அப்போதும் சொல்ல வேண்டும். அது வேறு காரணங்களுக் காக அல்ல. மாகாண சபை இங்கு மலர்ச்சியைக் கொண்டு வரப் போகின் றதா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

இங்கு இருக்கின்ற சுரேஷ் பிரேமச்சந்தி ரன், சித்தார்த்தன், மாவை சேனாதி ராசா,சிவஞானம் போன்றவர்களுக்கு உண்மை என்ன என்பது தெரியும். ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் மத்தி யிலே அதுவொரு பொதுஜன வாக்கெடுப் பாக நடாத்தப்பட வேண்டுமென நினைக் கிறேன். அதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

நேற்று முதல்நாள் தனியார் ஊடக மொன்றின் நிகழ்ச்சியொன்றில் நான் கலந்து கொண்டிருந்த போது யாழ் மாவட்ட எம்.பி. ஒருவருடனும் பேச வேண்டி இருந்தது. அது ஒரு கட்டத்திலே சல சலப்பாகக் கூடப் போய்விட்டது. எனினும், எது எப்படியிருந்தாலும் நான் தெளிவாக இருக்கின்றேன்.

இங்கே தமிழரசுக் கட்சியாக இருக்க லாம். சித்தார்த்தன் மற்றும் சுரேஷ் தலை மையிலான கட்சிகளாக இருக்கலாம். எல்லாக் கட்சிகளுமே தேர்தல்களில் போட் டியிடுகின்ற போதும் சரி, இப்போதும் சரி, மக்கள் மத்தியிலே சமஷ்டி என்ற நிலைப் பாட்டைச் சொல்லித் தான் மக்களிடம் வாக்கு கேட்கின்றார்கள். அதற்குத்தான் மக்களும் வாக்களித்திருக்கின்றார். அதுதான் மக்கள் வழங்கிய ஆணை. அதில் என்ன பிரச்சினை என்றால் அந்த ஆணையின் இலக்கை அடைவது எப்போது, எப்படி என்பதுதான். அதில் தான் பிரச்சினை உள்ளது. அது தான் பிரச்சினை என்பது எல்லாம் எனக்கும் தெரியும். அதலேதான் அனைவரும் முட்டி மோதிக் கொண்டிருக்கின்றார்கள்.

நான் அறிய தமிழரசுக் கட்சியாக இருக்கலாம், ஈழமக்கள் புரட்சிகர விடு தலை முன்னணியாக இருக்கலாம், தமி ழீழ விடுதலை இயக்கமாக இருக்கலாம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி யாக இருக்கலாம் – அல்லது எல்லோருமே அந்த இலக்கை அடைவதற்கு ஒரே வழிப்பாதையையே தேர்வு செய்திருக்கி றார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

அந்த வழிப்பாதையில் செல்லும் போது இடைத்தங்கல் முகாம்கள் இருக்கலாம். அதையெல்லாம் பெற்று, அதில் ஸ்திரப் படுத்திக் கொண்டு அடுத்த கட்டத்திற்கு செல்லலாம் என நினைக்கின்றார்கள். அதுதான் அவர்களது நிலைப்பாடு. எது சரி, எது பிழை என்பதை வரலாறு தீர்ப்புச் சொல்லும். நான் தீர்ப்பு வழங்க முடியாது.

இவ்வாறான நிலைமையில் இங்கு அடுத்த அணி அல்லது இன்னொரு கருத்து இருக்கிறது என்பது தெரிகி றது. அது என்னவென்றால் இது வேண் டாம் அல்லது இடைத்தங்கல் முகாம் களே வேண்டாம் . அது மட்டுமல்ல 13 ஆவது திருத்தத்தையே அகற்ற வேண்டு மென்று சொல்லுகிறார்கள். அதனை நான் காதால் கேட்டேன். இதே போன்றே தெற்கில் சரத்வீரசேகர, உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ போன்றவர்களும் இதை அகற்ற வேண்டுமென்று கேட்கின்றனர்.

ஒவ்வொரு தரப்புமே முன்னெடுக் கின்றவை அந்தந்த வேலைத்திட்டங் களாக இருக்கலாம் என்பதால் அதில் சரி, பிழை நான் சொல்லவில்லை. தனித் தனிக் கட்சிகளாக இருந்தாலும் கூட, இங்கு ஆதரவு – எதிர்ப்பு என பிரதான இரண்டு இரண்டு அணிகள் இருக்கின் றன என்பது தான் உண்மை. ஆனால் இவர்கள் எல்லாரும் கேட்பது சமஷ்டிதான். அது, மனோ கணேசன் கூட சமஷ்டிவாதி தான். எனக்கும் சமஷ்டி வேண்டும். அது தான் ஜனாநயாக நாட்டிலே மக்களாட்சி யின் உச்சம். அதை எப்படி அடைவது? சின்ன இடைவெளி. அதன் வழிப்பாதை என்பது ஒவ்வொருவருக்கும் மாறுபடலாம். ஆனாலும் ஜனநாயக நாட்டில் அதற் கான உரிமை இருக்கிறது.

ஆகவே சமஷ்டி என்ற இலக்கை அடைவதற்கு இடைத்தங்கல் முகாம் களைப் பலப்படுத்தித் திடப்படுத்திக் கொண்டு நகர்வோமா என்று ஓர் அணி மக்களிடம் கேட்கலாம். ஆனால் மற் றைய அணி, அப்படியல்ல என்றும் நாங் கள் நேரே சமஷ்டி அடிப்படையிலான தீர் விற்கு போவோம் என்றும் கேட்கலாம். அவர்களும் இவர்களும் அப்படி இப்படிக் கேட்பதில் பிரச்சினையில்லை.

ஆனால் அந்தத் தேர்தல் ஒரு கருத் துக் கணிப்பு வாக்கெடுப்பாக நிகழ மென்று நினைக்கிறேன். ஏனென்றால் இந்த ஒரு பிரச்சினையை மாத்திரம் வைத்துக் கொண்டு வடக்குக் கிழக்கில் – தமிழ்த் தேசிய அரசியலிலே – முட்டல் மோதல் எக்கச்சக்கமாக நடந்து கொண் டிருக்கிறது. அதைப் பார்த்து நான் சலித் துப் போய்விட்டேன் என்பதை இங்கு முரசுக்கும் நான் அறிவிக்கிறேன். அது தான் உண்மையான நிலைவரமாக இருக்கிறது.

இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக தூதரக அலுவலர் வந்திருக்கிறார். இந் திய அரசாங்கத்தின் மூலமாக இலங்கை வாழ் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சி னைக்கு அரசியற் தீர்விற்கு ஒத்துழைப்பை பெற்று செய்ய வேண்டிய காலம் கடந்தி ருக்கிறது என்பது எனது நிலைப்பாடு. இந்திய அரசாங்கத்தின் முன்னுரிமைப் பட்டியலிலே இலங்கைவாழ் தமிழ் மக்க ளின் தேசிய இனப்பிரச்சினை இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அந் தக் காலம் கடந்து விட்டது. ஆனால் பட் டியலில் இருக்கிறது. அவ்வாறு இருக்கும் அந்தப் பட்டியலில் உள்ள அம்சத்தைக் கூட இல்லாமலாக்கிவிட வேண்டாமெனக் கேட்கின்றேன்.

இங்கு உரையாற்றிய ஆறு.திரு முருகன் ஒரு விடயத்தை அழகாகச் சொன் னார். அதாவது இங்கே வடகிழக்கு ஈழத் தமிழர்கள் மத்தியிலே நாட்டை விட்டு வெளியேறும் போக்கு அதிகம் இருப்ப தாக மிகக் கவலையோடே சொன்னார். அவர் முகத்திலும் அந்தச் சோகத்தை பார்த்தேன். குரலிலலும் அந்தச் சோகத் தைக் கேட்டேன். இதைப்பற்றி நான் ஒரு விடயத்தை சொன்னால் தப்பாகப் புரிந்து விடாதீர்கள்.

இன்று ஈழத் தமிழர்களின் அபிலா சைகள் பற்றி நாங்கள் அதிகமாகப் பேசுகிறோம். ஆனால் ஈழத்து இளைய தலைமுறையின் அபிலாசை என்ன தெரி யுமா என்று பார்க்கின்ற போது வெளி நாடு போவது தான் என்பதாக உள்ளது. எனக்குத் தெரிந்தவரையில் அது தான் இங்கு நடக்கிறது. எனது பகுதியான கொழும்பிலே கூட வாழ்கின்றவர்களும் வெளிநாடு போகத்தான் காத்து இருக் கின்றனர். ஏனெனில் அண்ணன், அக்கா என உறவுகள் அங்கு (வெளிநாட்டில்) இருப்பதால் தாங்களும் போகக் காத்துக் கோண்டிருப்பதாகச் சொல்லுவார்கள்.

இவ்வாறு செல்வதுதான் அவர்களது சிந்தனையாக இருக்கிறது. இது அரசியல் தலைமைகளின் தோல்வி. இதைக் கூறு கின்ற போது கோபப்படாதீர்கள். உண்மை அதுதான். இப்படியே போனால் – நாடு காலியானால் – காணி காலியாகினால் காணி அதிகாரம் எதற்கு? ஏன் காணி உரிமை? வெளிநாடு சென்றவர்கள் இங்கு வருவதில்லையே!

அவ்வாறு சென்றவர்கள் விடுமுறைக்கு வருகிறார்கள். சிலர் ஓய்வு காலத்திற்கும்

(4ஆம் பக்கம் பார்க்க.)

## ஈழத்து இளைய...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஓய்வெடுக்க வருகிறார்கள். அவர்கள் வந்தாலும் பிரயோசனம் கிடையாது. இளையோர் இல்லை. இளையோர் இல்லாத சமுதாயமாக – இளையோர் தளர்ந்து போகின்ற சமுதாயமாக – எனது ஈழத் தமிழர் உடன்பிறப்புகளின் இனம் உருமாறிவிடுமோ என்ற அச்சம் எனக்கிருக்கின்றது. அந்தப் பயம் ஏற்பட்டுள்ளது. மனப்பூர்வமாக அச்சப்படுகிறேன்.

ஆகவே தயவு தாட்சண்யம் இல்லாமல் எழுதுங்கள் வித்தியாதரன் அவர்களே. தயங்காதீர்கள். எப்பொழுதும் உங்கள் எழுத்தில் என்ன எழுதுகின்றீர்கள் என்று நான் பார்ப்பதில்லை. அந்த எழுத்துக்குப் பின்னால் – வரிகளுக்கு இடையில் – அச்சில் வராமல் – (பூடகமாக) என்ன இருக்கிறது என்றுதான் நான் பார்ப்பேன். அதை நீங்கள் நேரடியாகவே எழுதுங்கள். உங்கள் கருத்தை ஒரு சிலர் ஏற்றுக் கொள்ளலாம். ஒரு சிலர் மறுக்கலாம். அதில் பிரச்சினையில்லை.

இப்பொழுது மலையகத் தமிழர்களை பற்றி அண்ணண் மாவை சேனாதிராசா அவர்கள் அருமையாகச் சொன்னார். அதே போல் நிறைய பேர் பலதைச் சொன்னார்கள். அதில் மனோ கணேசன் யார் என்ற பிரச்சினை வந்தது. அவர் மலையகத் தமிழரா, இல்லையா என்பது போல பேசப்பட்டது. எனது கட்சி அதிகமாக மலையகத் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிதான். நான் நாடோடித் தமிழன். அங்கு, இங்கு என ஓடிக் கொண்டிருப்பேன். அதில் பிரச்சினை கிடையாது. அது தேவையும் இல்லை.

மலையகத் தமிழர்களின் இன்றைய துன்ப, துயர கஷ்டங்களுக்கும் கண்ணீருக்கும் பின்தங்கியுள்ளமைக்கும் இதே போல் சிங்களப் பேரினவாதம்தான் காரணமாக உள்ளது. அதை நீங்கள் எழுத்தில், நெற்றிப் பொட்டில் அடித்தாற் போல் சொல்லுங்கள். ஈழத் தமிழ் மக்களை நோக்கித்தான் சிங்களப் பேரினவாதம் பாய்கிறது. மலையகத் தமிழர்களை நோக்கிப் பாயவில்லை என்றில்லை. அங்கும் தோட்டங்களிலே பாய்கின்ற போது நானே நேரடியாக சென்று சண்டை போட்டிருக்கிறேன்.

தோட்டங்களை அண்டி சிங்களக் கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களில் உள்ளவர்கள் அடாத்தாகப் பல ஏக்கர் காணிகளைப் பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு எதிராகப் பொலிஸோ, அமைச்சோ, அரசாங்கமோ வராது. ஆனால் நம்மவர்கள் காய்கறி பயிர் செய்வதற்குக் கூட சிறு துண்டு காணியைப் பிடித்தால் பொலிஸிலிருந்து எல்லாம் உடனே வரும். ஆனால் இறுதியில் தடுத்து நிறுத்துவதற்கு மனோ கணேசனே வருவார். இதற்கு காரணம் என்ன என்றால் நம்மவர்கள் தமிழர்கள், அவர்கள் சிங்களவர்கள் என்பதுதான். இனவாதம்தான் உண்மையான காரணம். பேரினவாதம்தான்.

அடுத்து பாரதநாடு. இந்திய நாடு. அன்று கலந்தாலோசிக்காமல் தங்களதும் இலங்கையின் தேசிய நலனையும் மட்டும் கருத்தில் எடுத்துக் கொண்டு எங்களில் 60 வீதமானவரை ஆடு,மாடுகள் போல் நாடு கடத்திவிட்டார்கள். நேரு இதற்கு உடன்படவில்லை. ஆனால் சாஸ்திரி வந்த பின் அது நடந்துவிட்டது. சிறிமா அவரைப் பயன்படுத்திவிட்டார். அவ்வாறு போகாமல் இருந்திருந்தால் இன்னும் 25 பிரதிநிதிகள்கள் நாங்கள் மலையகத் தமிழர்களாக இருந்திருப்போம். வடக்கு கிழக்குத் தமிழர்களுடன் நாங்கள் 50 பிரதிநிதிகள் இருந்திருந்தால் தமிழர்களின் நிலைமை இந்தளவு மோசாமாக இந்த நாட்டிலே இருந்திருக்காது.

எங்களைத் தவிர்த்துவிட்டு யாரும் அரசாங்கம் அமைத்திருக்க முடியாது. பலவீனமாக இருந்திருக்க மாட்டோம்.

இதற்கடுத்து பிரித்தானியர். வேலைக்கு என்று கொண்டு வந்தார்கள். அவ்வளவு செல்வங்களையும் அள்ளிக் கொண்டு போய்விட்டார்கள். கடைசியாகத்தான் அங்கே (மலையகத்தில்) உள்ள அரசியல் தலைவர்கள். ஆனால் இப்போது தான் கூட்டணி உருவாகி அவர்களை எதிர்கால சிந்தனையில் வழிநடத்திக் கொண்டிருக்கின்றோம்.

இங்கு வரும் போது நானும் ஹக்கீமும் அருகில் அமர்ந்து ஜனாதிபதி ரணில் பேச்சுவார்த்தைக்கு கட்சிகளை அழைப்பது குறித்து பேசிக்கொண்டு வந்தோம். இதன் போது ஜனாதிபதி ரணில் உங்களை எப்பொழுது பேச்சுவார்த்தைக்கு அழைக்கப் போகின்றார் என நான் ஹக்கீமிடம் கேட்டுக் கொண்டு வந்தேன். எங்களை அழைப்பதற்கு முன்னதாக சொல்லெணாத் துயர, துன்பங்களை அனுபவித்தவர்கள் தமிழர்களே. ஆகவே அவர்களது பிரச்சினையை தீருங்கள், அதே நேரம் எங்களையும் பிரித்துப் பார்க்காமல் செய்ய வேண்டுமென்றவாறாகச் சொல்லியிருந்தார்.

அதே வேளையில் தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் முஸ்லிம் தரப்புக்களையும் அழைத்து ஜனாதிபதி பேச உள்ளார் என அறிவித்திருக்கின்றார். ஈழத்தமிழர்களை அழைத்துல் பேசுவது போல் எங்களை வேறு, வேறு குழுக்களாக அழைத்துப் பேசலாம் என்றவாறாக நிலைமை இருக்கிறது. அதிலும் தமிழ்த் தரப்புக்களுடனான பேசுவதற்கு "கொமிற்றி" அமைத்து இருக்கிறார் ரணில். ஆனாலும் இனிமேலும் பேசுவாங்களோ என்று எனக்குத் தெரியாது.

அதே போல் மலையகத் தமிழர்களையும் முஸ்லிம்களையும் அழைத்துப் பேசுவதற்கு குழுக்களை அமைப்பதாக ஜனாதிபதி சொன்னார். ஆகவே அவர் அதனைச் செய்யட்டும். அந்த மாதிரி விசயங்களை எல்லாம் அவர் செய்கின்ற போது நாம் சென்று பேசுவோம்.

இது குறித்துப் பேசப்பட்ட போது வடக்குக் கிழக்கில் தேர்தல் நடாத்தப்பட வேண்டும், அவ்வாறு நடாத்தப்படுகின்ற தேர்தல் ஒரு சர்வஜெனவாக்கெடுப்பாக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் இதைச் செய்யாவிட்டாலும் பரவாயில்லை, முரண்பாடுகளை நீக்கி நேரடியாகவே "லோங் ஜம்" பண்ணி சமஷ்டிக்கு போகப் போகிறோமா அல்லது இடைத் தங்கலில் நின்று பார்த்துப் போகப் போகிறோமா தெரியவில்லை. எதுவானாலும் பாருங்கள் என்று சொன்னேன். – என்றார்.

## இன விடுதலைக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளிலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினருமானமாவைசேனாதிராசா எமது இனம் விடுதலை பெற தொடர்ந்தும் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.வித்தியாதரனின் வழிகாட்டலில் பிரசுரமாகும் 'முரசு' மின்னிதழ் வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாண கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நேற்று நடைபெற்ற போது அந்நிகழ்வில் பிரதம அத்திகளில் ஒருவராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையிலே எங்களது இனம் அழிக்கப்படுகிறது. இனவழிப்புத் தொடர்கிறது. எங்களது மொழி,கலாச்சாரம், தனித்துவங்கள், பண்பாட்டுக் கோலங்கள் அழிக்கப்படுகின்றன. அதே போன்று மொழி மற்றும் மதம் அழிக்கப்பட்டு வருகின்ற நிலையில் நாம் இப்போது மொழி மற்றும் மதம் மற்றும் நிலம் என்பவற்றுக்க்காக போராடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு எப்படிப் பார்த்தாலும் நாங்கள் எமது இருப்பிற்கான போராட்டக் களத்திற்குள்ளேயே இருக்கின்றோம். நாம் ஒவ்வொரு விதத்திலும் செத்துக் கொண்டிருக்கிறோம். அழிக்கப்பட்டு கொண்டிருக்கிறோம். இவற்றுக்கு எதிராகவே எமது போராட்டங்கள் தொடர்கின்றன.

எமது இனத்திற்கு எதிரான நடவடிக்கைகளுடன் முரண்பட்டு நின்றமையினால் நான் சிறை சென்றிருந்தேன். நான் செத்துப் பிழைத்தவன். அந்தச் சிறைதான் ஆற்றல்,அறிவு பெற்ற மனிதனாக எனக்கான சந்தரப்பத்தைத் தந்தது. அதன் பின்னரும் இனத்திற்காக நாம் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் போராடிக் கொண்டுதான் இருக்கிறோம்.

எமது இனத்தின் விடிவிற்காக ஊடகங்கள் செயற்பட்டே வந்திருந்தன. அதே போன்று ஊடகங்கள் இதற்காக நெருக்கடிகள், அழுத்தங்கள், இழப்புகளைச் சந்தித்தும் வந்திருக்கின்றன. இனத்தின் விடிவிற்காக தொடர்ந்தும் பேனாக்கள் எழுத வேண்டும். அத்தோடு இனத்தின் விடுதலைக்காகவும் மக்களின் விடிவிற்காகவும் இந்தக் காலகட்டத்தில் அனைவரும் செயற்பட வேண்டியது அவசியமானது.

இன்றைக்கு எமது இளந்தலைமுறையினர் மத்தியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதனால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக எமது கலாச்சாரம் அழிக்கப்படுகிற நிலைமையில் இதனைத் தடுத்து, எதிர்காலச் சந்ததியைச் சரியான முறையில் வளர்த்து எடுக்க வேண்டும். – என்றார்.

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் மீண்டும் இரத்தக்களரி ஓடும் என்று கூறிவைக்க விரும்புகின்றோம்."

– இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

"கிடைக்க மாட்டாத ஒன்றைத் திருப்பித் திருப்பிக் கேட்டால் கிடைக்கும் என்று சம்பந்தன் அணியினர் எண்ணுகின்றனர்.

கிடைக்க மாட்டாத சமஷ்டியைக் அவர்கள் கேட்பதால் – அதில் விடாப்பிடியாக இருப்பதால் – இன முரண்பாடு மேலும் உச்சமடையும். மீண்டும் இரத்தக்களரிதான் ஓடும்.

நாட்டில் இன முரண்பாடு உக்கிரமடைய நாம் விரும்பவில்லை. ஆனால், அந்த மோசமான நிலைமையைத் தமிழ்த் தலைவர்கள் விரும்புகின்றனர். அதை வைத்து நீண்ட காலத்துக்கு அரசியல் பிழைப்பு நடத்தலாம் என்று அவர்கள் தப்புக்கணக்குப் போடுகின்றனர்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொள்ளும் இந்தப் பத்திக்கு 'இரகசியம் – பரகசியம்' என்ற தலைப்பு அதனால் பொருத்தமானதாக இருக்கும் என்று நினைக்கிறேன். இன்று தொடக்கம் காலையில் தினசரி உங்களை இந்தப் பத்தியில் தவறாது சந்திப்பேன்.

இன்று இந்த ஆரம்பத்தை அதி உத்தமரிலிருந்து தொடங்கலாம் என்று நினைக்கிறேன்.

'கிழட்டு நரி' என்று வர்ணிக்கப்படும் முதலாவது அதிஉத்தமர் ஜே.ஆர். அவரின் மருமகனும், அரசியல் வாரிசும் இப்போதைய அதிஉத்தமரும் கூட இன்றைய அரசியலில் ஒரு கிழட்டு நரிதான்.

தேர்தல்களை நடத்தும் அதிகாரம் சட்டரீதியாக – அரசமைப்பு ரீதியாக – தேர்தல் ஆணையகத்துக்குத் தனித்துவமாக வும் விசேடமாகவும் வழங்கப்பட்ட பிரத்தியேக உரிமையாகும். அதில் அதிஉத்தமர் கூட தலையிட முடியாது. ஆனால் நிதி அமைச்சைக் கையில் வைத்துக்கொண்டு, அதன் மூலம் அரசமைப்புக்கும் நாட்டின் சட்ட ஏற்பாடுகளுக்கும் 'பெப்பே' காட்டி, தேர்தலை நடத்தாமல் வெற்றிகரமாகத் தடுக்கும் அரசியல் நரித் தந்திரம் அவருக்குத்தான் உள்ளது. அவரது கிழட்டு அரசியல் நரிதந்திரத்துக்கு ஓர் உதாரணம் இது.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில், தான் வென்று, தனது அதிகாரத்தை மேலும் 5 வருடங்கள் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பது இந்தக் கிழட்டு நரியின் இப்போதைய பேராசை. அதற்கு முன்னர் வேறு எந்தத் தேர்தலை நடத்த அனுமதித்தாலும் அதன் முடிவு தனது அடுத்த ஜனாதிபதி பதவிக்கான கனவை – நப்பாசையை – சிதறடித்து விடும் என்ற உண்மையைப் புரிந்து, அதனால் ஏனைய தேர்தல்களுக்கு தொடர்ந்து ஆப்பு வைப்பதில் முனைப்பாக நிற்கிறார் கிழட்டு நரித்தந்திரசாலி.

அதிகாரப் பகிர்வு குறித்து ஆராய அவர் அழைத்த சர்வகட்சிக் கூட்டத்தில், மாகாண சபை தேர்தலை உடனடியாகவே நடத்த வேண்டும் என்று மற்றத் தரப்பினருடன் கூட்டுச் சேர்ந்து ஒற்றைக் காலில் பிடிவாதம் பிடித்த சுமந்திரன், அதற்காகக் கிழட்டு அரசியல்வாதியிடம் 'அர்ச்சனைகள்' வாங்கிக் கட்டியதன் பின்னணி – காரணம் – இதுதான்.

அண்மையில் இந்தியா சென்ற ரணிலாரின் அந்த விஜயம் பற்றிய பல செய்திகளும் தகவல்களும் ஏற்கனவே பகிரங்க வெளியில் தாராளமாக அலசி ஆராயப்பட்டுள்ளன.

வெளிவராத ஒரு தகவல் உண்டு. அது சுவாரசியமான விடயம்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்த முயலுகின்றார் ரணிலார். காற்றுப் போய் 'நிம்'மில் ஓடும் தமது ஐ.தே.கட்சியை மட்டும் நம்பித் தேர்தல் களத்தில் இறங்க முடியாது என்ற யதார்த்தம் பழுத்த அரசியல்வாதியான அவருக்கு நன்கு தெரியும். அதே சமயம் நாமல் – பஸில் போன்ற ராஜபக்ஷக்களின் பிடியில் இருக்கும் பொதுஜன பெரமுனக் கட்சியில் தங்கி இருப்பதும், கடைசி நேரத்தில் காலை வாரிவிடும் விவகாரமாகி விடலாம் என்பதும் அவருக்குத் தெரியும். மூத்த ராஜபக்ஷவான மஹிந்த தனிப்பட்ட முறையில் ரணிலுக்குச் சார்பான நிலை எடுத்தாலும், வயதால் தளர்ந்து அமுங்கிப் போய் இருக்கும் மஹிந்தரின் ஆதரவை மலையென நம்பித் தேர்தல் ஆற்றில் இறங்க ரணில் தயாராக இல்லை. அதனால், பொதுஜனப் பெரமுன மற்றும் சுதந்திரக் கட்சி போன்றவற்றின் அதிருப்தி எம்.பிக்களை வளைத்துப் போட்டு, நீர்கொழும்பு மாவட்ட எம்.பியான நிமல் லான்ஸா ஏற்பாட்டில் மாற்றுக் கட்சிக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கப் பின்னணியில் இருந்து அதனை இயக்குகின்றார் ரணில்.

சுமார் ஐம்பது எம்.பிக்களின் ஆதரவுடன் புதுக் கட்டமைப்பு ஒன்றை ஜனவரியில் உருவாக்கி விடுவேன் என்ற நிமல் லான்ஸாவின் கயிற்றை ரணிலார் நன்கு விழுங்கி இருக்கின்றார் என்று தெரிகிறது.

அதையொட்டி, தான் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவிருக்கும் அரசியல் கூட்டு பற்றிய விடயங்களை அடுத்த ஜனவரியில் ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பார் என்றும், அடுத்த ஜனாதிபதி தேர்தல் வழமைக்கு மாறாக ஆறு மாதங்கள் முற்கூட்டியே – அடுத்த மார்ச்சில் – நடக்கும் என்றும் செய்திகள் ஏற்கனவே அரசல் புரசலாக வெளிவந்துவிட்டன.

வெளியாகாத ஒரு சுவாரஸ்யமான தகவல் உண்டு. அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியையும் ரணில் முடிவு செய்துவிட்டார் என்பதுதான் அது.

அவருக்கு மிக நம்பகமான இந்திய ஜோதிடர் ஒருவர் ஜாதகம் கணித்து, காலம் குறித்துக் கொடுத்திருக்கிறாராம்.

முந்திய வாரத்தில் ரணில் புதுடில்லி போன போது சோதிட ஆலோசனை கிட்டியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வரும் மார்ச் 21 ஆம் திகதி வியாழக்கிழமை ஜனாதிபதித் தேர்தலை நடத்த ரணில் முடிவு செய்திருக்கின்றார். அதில் ஒரு விசேடம் உண்டு.

மார்ச் 21 தேர்தல் நடந்தால் அடுத்த நாள் 22 ஆம் திகதி முடிவு வெளியாகும். இரண்டு நாள் கழித்து மார்ச் 24ஆம் திகதி ரணிலுக்கு 75 வயது. அவரது நீண்ட அரசியல் பயணத்துக்கு – ஐம்பது வருட அரசியல் வாழ்க்கைக்கு – வெகுமதியாக, தேர்தல் முடிவில் பெறக்கூடிய வெற்றியை 75 ஆவது பிறந்த நாள் பரிசாக சுவைக்க, முற்கூட்டியே திட்டமிடுகின்றார் அவர் என்பதுதான் உள்வீட்டுத் தகவல்.

தமது 75ஆவது பிறந்த தினத்தன்று அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான ஜனாதிபதியாகப் பதவியேற்கும் ரணிலாரின் நப்பாசையை நோக்கும் போது 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்...' என்ற சினிமாப் பாடல்தான் நினைவுக்கு வருகிறது.

அடுத்த வருடம் செப்ரெம்பர் நடுப்பகுதிக்குப் பின்னர் நடத்த வேண்டிய ஜனாதிபதித் தேர்தலை ஆறு மாதங்கள் முற்கூட்டி அடுத்த மார்ச்சில் நடத்துவதாயின் அதற்கு ஓர் அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டியிருக்கும்.

முற்கூட்டியே தேர்தலை நடத்தும் முயற்சி என்பதால் அதற்குச் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்ற கட்டுப்பாட்டை உயர்நீதிமன்றம் பெரும்பாலும் விதிக்காது என்பது திண்ணம். எனினும் அரசமைப்புத் திருத்தம் என்பதால் நாடாளுமன்றத்தில் அதற்கு மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு அவசியம்.

ஆயினும் முற்கூட்டி ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் முயற்சிக்கு பொதுவாக எதிரணிக் கட்சிகள் உட்பட எந்தத் தரப்புகளுமே எதிர்ப்புக் காட்டுவது தார்மீக ரீதியில் முறையற்றது என்பதால் அந்த உத்தேச அரசமைப்புத் திருத்தமும் விக்கினம் ஏதுமின்றி நிறைவேறவும் ஜனாதிபதித் தேர்தல் ஆறு மாதங்கள் முற்கூட்டி நடத்தப்படவும் நிறைய வாய்ப்புகள் உள்ளன.

ஆனால், அதன் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குத் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்தும் ரணிலின் முயற்சி, அவரது தற்போதைய ஜனாதிபதிப் பதவிக் காலத்தை ஆறு மாதங்கள் முற்கூட்டியே முடிக்க வைத்து, அவரை நிரந்தர அரசியல் ஓய்வுக்கு அனுப்பி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

*"மனிதன் நினைப்பதுண்டு*
*(அரசியல்)வாழ்வு நிலைக்குமென்று*
*இறைவன் நினைப்பதுண்டு*
*பாவம் மனிதன் என்று....!"*

O O O

பிற்குறிப்பு:

நேற்று நமது 'முரசு' மின்னிதழ் வெளியீட்டு விழாவில் பேசிய மனோ கணேசன் எம்.பி. 'வித்தி சொன்னதை ரணில் கேட்டிருந்தால் 2005 ஆம் ஆண்டே அவர் ஜனாதிபதியாகியிருப்பார்' – என்று ஒரு விடயத்தைக் கோடி காட்டிச் சென்றார்.

ஆம், அது உண்மைதான். அது என்ன விடயம்? அப்படி தமது கைக்குக் கிட்டிய மிக உறுதியான வெற்றி வாய்ப்பை ரணில் எவ்வாறு கோட்டை விட்டார்? என் செய்தியை ஏற்றுச் செயற்படாமல் போனமைக்கு ரணில் இப்போது கூறும் காரணங்கள், விளக்கங்கள் என்ன? நீண்ட பல புதினங்கள் பொதிந்த அந்த உண்மைகளை அடுத்து வரும் நாள்களில் உங்களுடன் பகிர்ந்து கொள்வேன். காத்திருக்குக!

## வித்தி தந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விழாவில் அதன் ஆலோசக ஆசிரியரான சிரேஷ்ட பத்திரிகையாளர் வித்தியாதரனைக் குறிப்பிட்டு சிலாகித்துப் பேசும் போதே அவர் இவ்வாறு சொன்னார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் கூறியவை வருமாறு:-

நீங்கள் (வித்தியாதரன்) ஆளுமை உள்ளவர். துணிச்சல் உள்ளவர். உங்கள் கருத்தை நீங்கள் தொடர்ந்தும் துணிச்சலாக எழுத வேண்டும்.

நீங்கள் சொன்னதை 2005 ஆம் ஆண்டே ரணில் கேட்டிருந்தால் அன்றே அவர் ஜனாதிபதியாகியிருப்பார். அதுதான் உண்மை. வித்தியாதரன் சொன்னதை ரணில் விக்கிரமசிங்க கடந்த 2005 ஆம் ஆண்டு தேர்தல நேரத்தில் கேட்டிருந்தால் ஒருவேளை அன்றே அவர் ஜனாதிபதியாகிருப்பார்.

ஆயினும் ஒருவேளை ஆகாததது நல்லதாகக் கூட இருக்கலாம். இருந்தும் இன்று ஆகியிருக்கிறார். அது பரவாயில்லை.

எனினும் வித்தியாதரன் அவர்களே! நீங்கள் "கோல் கீப்பராகவே" இருங்கள். கப்டனாக வேண்டாம். எங்களுக்கு நிறைய கப்டன்கள் இங்கு இருக்கின்றனர். அவர்கள் வருவார்கள், போவார்கள். அதில் பிரச்சினையில்லை. கோல் கீப்பர்தான் வேண்டும். அந்த கீப்பர் தமிழ் பேசும் மக்களுக்காக என்றும் செயற்பட வேண்டும். – என்றார்.

NORTH WALL
ENGINEERING

யாழ் மண்ணில்
அனைத்து
கட்டுமான
தேவைக்கும்!!!
சேவைக்கும்!!!

நோர்த் வோல்
என்ஜினியரிங்

Nelliady, Karaveddy
Jaffna.

0777818208
0774002766

## தமிழ்ப் பேசும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நண்பர் வித்தியாதரனின் நெறியாள்கையில் முரசு இணையவழி செய்தித் தாள் வருகிறதென்பது மகிழ்சியானது. உண்மையில் வித்தியாதரன் என்கிற ஆளுமைக்கு பல பக்கங்கள் இருந்தன.

குறிப்பாக இந்த நாட்டின் ஊடக வரலாற்றில் எடுத்துக் கொண்டால் சில செய்தி தாள்களின் உரிமையாளர்கள் அல்லது அதற்கான வெளியீட்டு நிறுவனம் என்பது பெரிய வியாபார நிறுவனமாக இருக்கிறது.

அந்த நிறுவனத் தயவில் வருகின்ற பத்திரிகைகள் தனியானவை. அவற்றுக்கு ஆசிரியர்கள் வருவார்கள், போவார்கள். ஆனால் சில ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்களின் ஆளுமையில்தான் பத்திரிகைகள் தங்கியிருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு சில ஊடக ஆசிரியர்களில் இருக்கிறார்கள். இதைவிட வித்தியாசமான ஆளுமையாக நண்பர் வித்தியாதரன் இருக்கிறார். அவருடைய இத்தகைய ஆளுமை என்பது என்னுடைய கணிப்பு மட்டுமல்ல, பலருடைய கணிப்பாகவும் இருக்கலாம்.

இதிலே நண்பர் வித்தியாதரனுக்கு இருக்கிற பெரிய பேறு என்னவென்றால் எல்லோரோடும் அவர் சகஜமாகப் பழகியிருக்கிறார். குறிப்பாக என்னோடு அண்மைக்காலமாக அவருடைய உரையாடல் என்பது ஆளுமையின் வெளிப்பாடாக இருந்தது. என்னிடத்தே அவர் சில விசங்களைப் பேசினார். பகிர்ந்தார். அவை ஒரு பத்திரிகையாளனாக எழுத முடியாத விடயங்கள். தரப்புகளிடையே தகவல் பரிமாறுகின்ற விடயங்கள்.

தலைவர்களுக்கிடையே ஓடித் திரிந்தவர் என்ற அடிப்படையில் இந்தத் தகவல்களை அவர் சொல்லிய போது, கள நிலைவரம் சம்பந்தமாக நான் சில மாற்றுக் கருத்துக்களை (முன்னர்) பேசி இருந்தால் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் என்பது வேறு திக்கிலே போயிருக்குமோ என்று எண்ணுகிறேன். இவை சம்பந்தமாக அவர் என்னோடு மிக நெருக்கமாகச் சில விடயங்களைப் பேசியிருக்கின்றார்.

நானும் புலிகளின் தலைவரோடு நேரடியாகப் பேசியவன் என்ற அடிப்படையில் அவரோடு பல விடயங்களை நான் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற காலப்பகுதியில் நிறையப் பேசியிருக்கிறோம். அன்ரன் பாலசிங்கத்தாரோடும் பல விடயங்களைப் பேசியுள்ளோம். நான் பேசியது, வித்தியாதரன் பேசியது என நாங்கள் அன்று பேசியவற்றை இப்போது பரிமாறிக் கொள்கிற பொழுது சில விடயங்கள் மாற்றமாக நடந்திருக்க வாய்ப்பு இருந்திருக்குமா என்று கவலையோடு நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

அவற்றையெல்லாம் பகிரங்கமாக வெளியில் எழுதகிற காலம் வர வேண்டும். அது குறிப்பாக வித்தியாதரனிற்கு வர வேண்டும். குறிப்பாக அவர் 'என் எழுத்தாயுதம்' எழுதியது மாதிரி தன்னுடைய சில சுய பதிவுகளை மீண்டுமொருமுறை எழுத வேண்டும் என நான் விரும்புகிறேன். ஏனென்றால் பல முக்கியமான விட்யங்கள் அவரிடத்தே பொதிந்து உள்ளன.

மறைந்த பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசீர் அரபாத் இலங்கைக்கு வந்த போது அவரைத் தனியாக சந்திக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அந்தச் சந்தர்ப்பத்தின் பொழுது அவரிடத்திலே நான் ஒரு கேள்வியைக் கேட்டேன். அதாவது நீங்கள் பெரிய நீண்ட விடுதலைப் போராட்டமொன்றைச் செய்து புகழ்பூத்த ஒருவராக இருக்கிறீர்கள், நீங்கள் எங்களுக்கு என்னதைச் சொல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்டிருந்தேன். தன் போது ஒன்று மட்டும்தான் சொல்லுவேன் என்று கூறினார். அதாவது யுத்தம் செய்வது அவ்வளவு கஷ்டமான விடயமல்ல, ஆனால் சமாதானத்தை பேணுவது என்பது அதைவிடவும் கஷ்டமான விடயம் என்று கூறியிருந்தார்.

இதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள் என்று அவர் எனக்குச் சொன்னது இன்று போல உள்ளது. அதாவது கல்லில் பதிந்த ஆணி மாதிரி அப்படியே பதிந்திருக்கிறது. இதைத்தான் உலகில் எங்கெடுத்தாலும் சரி விடுதலைத் தலைவர்கள் ஏதோவொரு கட்டத்தில் சமாதானத்தை அடைவதற்காக விலை கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் வெற்றிகரமாக தங்கள் போராட்டங்களிலே ஓர் இலக்கை அடைந்தார்கள், புகழின் உச்சியை எட்டினார்கள் என்றிருந்தாலும் நிறைய விழுப்புண்களையும் தாங்கினார்கள். அவர்கள் என்ன போராட்டம் செய்திருந்தாலும் ஈற்றிலே சமாதானத்திற்கு ஒரு விலையை அவர்கள் கொடுக்கத்தான் வேண்டியிருந்தது என்பதுதான் எல்லோருடைய அனுபவமும்.

எனவே இந்தப் பின்னனணியிலே நிச்சயமாகப் பல விடயங்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். அதைவிடவும் முக்கியம் இன்றைய அரசியல் சூழலில் தமிழ் பேசும் இனங்களுக்கு மத்தியில் பரந்து பட்ட ஒற்றுமை. அது மிக மிக முக்கியமானது. அதற்கான ஒரு களம் அமைவதற்கு உலகத் தமிழர்களின் உறவுப்பாலமாக இருக்கிற 'முரசு'ம் ஒரு வழிகாட்டியாகவும் வழித்துணையாகவும் இருக்க வேண்டுமெனப் பிராத்திக்கின்றேன். என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கொச்சைப்படுத்தாதீர்!

பிரச்சினைகளுக்கு - சர்ச்சைகளுக்கு - சிக்கல்களுக்கு - தீர்வு காணும் விடயத்தில், பொதுவாக இரண்டு வழிமுறைகள் அல்லது அணுகுமுறைகள் உண்டு.

ஒன்று - சமரசமாக, விட்டுக் கொடுத்து, அரவணைத்து, இணக்கத் தீர்வு காண்பது.

மற்றது - போராடி, முரண்பட்டு, முட்டி மோதித் தீர்வை எட்டுவது.

புரையோடிப் போயிருக்கும் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இந்த முதலாவது மார்க்கம் சரிப்பட்டு வரப்போவதில்லை என்ற தெளிவு கிட்டிய பிறகே, தமிழ் இளைஞர்கள் வேறு வழியின்றி இரண்டாவது பாதையைத் தேர்ந்தார்கள். இது சரித்திரம்.

அப்படி இருந்த போதிலும், யுத்தத்துக்கு நடுவிலும் சமாதானப் பாதையை அவர்கள் திறந்தே வைத்திருந்தார்கள். அதுவும் கூட நாம் தரிசித்த விடயம்தான்.

முதலாவது மார்க்கத்தில் - சமரசப் பாதையில் - தீர்வு எட்டப்படும் போது, அதாவது பிணக்குப்பட்ட தரப்புகள் இணங்கி போகும்போது, எந்தத் தரப்புக்கும் வெற்றியும் இல்லை, தோல்வியும் இல்லை என்ற நிலைமை சாத்தியமாகும்.

ஆனால், இரண்டாவது செல்நெறியில் - போராட்டப் பாதையில் - முடிவு எட்டப்படும் போது, ஒரு தரப்பு வெல்வதும், மறுதரப்பு தோற்பதும், வெற்றி பெற்ற தரப்புக்குச் சாதகமாக நிலைமை உருவாகுவதும், தவிர்க்க முடியாதவையே.

இந்த யதார்த்தப் புறநிலைமையைப் புரிந்து கொண்டே விடுதலைப் புலிகள் இறுதிவரைப் போராடினார்கள். அந்த விடுதலை வேள்வியில் தங்களையும் ஆகுதியாக்கினார்கள். அதன் விளைவை - முடிவை - பெறுபேறுகளை - அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களாகிய நாங்கள் - தமிழர்கள் - இன்று எதிர்கொண்டு நிற்கின்றோம்.

சரியோ, பிழையோ சில விடயங்களை நாம் மறந்து விடவோ, உதாசீனப்படுத்திவிடவோ கூடாது முடியாது.

இலங்கைத் தீவில், வடக்குக் கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழர்களாகிய நாம், மக்கள் எண்ணிக்கை விகிதத்தில் ஆக 12 வீதத்தினரே. அதில் அரைவாசிப் பேரே - ஆக ஆறு வீதத்தினரே - தமது தாயகமான வடக்குக் கிழக்கில் வாழ்கின்றனர். எஞ்சியோர் வடக்குக் கிழக்குக்கு வெளியே வசிக்கின்றனர். இந்த ஆறு வீத மக்கள் கூட்டத்தின் மத்தியில் இருந்து சுயமாக எழுச்சி பெற்ற விடுதலை அமைப்பே, வேறு அரசு அல்லது நாடு என்ற உலகின் எந்த கட்டமைப்பின் உதவியுமின்றியே தானாக முகிழ்ந்து, பேரெழுச்சி பெற்று, விஸ்வரூபம் எடுத்து, தமிழர் தேசக் கட்டமைப்புக்களை மீள ஸ்தாபித்து, முப்படைகள் மற்றும் பொலிஸ், நீதித்துறை போன்றவற்றை உருவாக்கி, சுமார் 2 தசாப்த காலம் சிங்கள பேரினவாத அரசுகளின் கண்களுக்குள் விரலை விட்டு ஆட்டிப் படைத்தது என்பதை நமது இன்றைய தலைமுறை மனதில் இருத்த வேண்டும்.

நீண்ட - தனித்துவமான - புரட்சிகரமான - சொல்லிலடங்காதத் தியாகங்களையும் ஈகங்களையும் கொண்ட - சளைக்காத - இந்த விடுதலைப் போராட்டம் தோல்வியில் முடிந்தது என்பதற்காக அதனைக் கொச்சைப்படுத்தும் போக்கில் ஊடகங்களில் தான்தோன்றித்தனமாக கருத்துப் பகிரும் நம்மவர்கள், அந்தப் போராட்ட தனித்துவத்தை - உட்கிடையை - அதன் தன்மான எழுச்சியை - அதன் தாற்பரியத்தை - ஒரு தடவை மனதில் இருத்திச் சிந்திப்பது நல்லது.

## நரிப்புல் தோட்டம் - பன்குடாவெளி பாலத்தை அமைக்கக் கோரிக்கை!



(பழுவூரான்)

மட்டக்களப்பு,ஓக.01

மட்டக்களப்பு வவுணதீவு மற்றும் செங்கலடி பிரதேச சபைகளுக்கு இடையிலான, நரிப்புல்தோட்டம் – பன்குடாவெளிப் பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக வவுணதீவு மற்றும் செங்கலடி பிரதேச சபைகளின் எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள், போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக தோணிகளில் இணைக்கப்பட்ட பாதைகளையே பயன்படுத்தி வருகின்றனர்.

மிகுந்த சிரமங்கக்கு மத்தியில் நாளாந்தம் பயணிக்கும் இக் கிராம மக்கள், போக்குவரத்தை இலகுபடுத்த பாலமொன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நரிப்புல்தோட்டம் – பன்குடாவெளிப் பாலத்தை நிர்மாணிக்கக் கடந்த காலங்களில் அடிக்கல் நாட்டப்பட்ட போதும், அதற்குப் பின்னர் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## மட்டக்களப்பு வாவியில் பெருகிவருகின்ற ஆற்றுவாழைத் தாவரங்களை அகற்றுங்கள்

### மீனவர்கள் தரப்பில் இருந்து கோரிக்கை



(பழுவூரான்)

மட்டக்களப்பு,ஓக.01

இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய வாவியான மட்டக்களப்பு வாவியில் பெருகிவரும் ஆற்றுவாழைத் தாவரங்களால் மீனினங்கள் அழிவடைந்து வருவதுடன், மீனவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்த வாவியில் மீன்கள் பாடலிசைத்ததால் “பாடும்மீன்கள் வாழும் வாவி” என இந்த வாவிக்குப் புகழாரம் சூட்டப்பட்டது.

இந்நிலையில் மட்டக்களப்பு வாவியில் சுமார் 15 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் இந்த வாவியை வாழ்வாதாரமாகக் கொண்டு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன.

ஆனால், ஆற்றுவாழைப்பெருக்கத்தால் மீனவர்கள் தோணிகளைத் தள்ள முடியாமலும் அவதியுறுகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு ஆற்றுவாழைத் தாவரங்களுக்குள் முதலைகள் மற்றும் பாம்புகளும் மறைந்திருக்கின்றன என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வாவியின் வளத்தைப் பயன்படுத்த இடைஞ்சலாகப் பெருகி இருக்கும் ஆற்றுவாழைகளை அகற்றித் தருமாறு மீனவர்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.








# நேற்று முதல் வெளியாகிறது முரசு

நேற்று மாலை யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற முரசு டிஜிற்றல் நாளேட்டின் வெளியீட்டு நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்...











A One Media Network
முரசு
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
a one








A One Media Network
முரசு


A One Media Network
முரசு
a one


A One Media Network
முரசு

# நிந்தவூர் விவசாயிகளின் முன்மாதிரி சொந்த நிதியிலேயே யானைவேலி!



(ஏ.எல்.எம்.)

இலங்கையின் நெல் உற்பத்தியில் இரண்டாம் இடம் வகிக்கும் அம்பாறை மாவட்டத்தின் முக்கிய விவசாயப் பிரிவாகத் திகழும் நிந்தவூர் கமநல சேவைகள் மத்திய நிலையப் பிரிவில் சுமார் 6,500 ஏக்கர் நெற் காணியில் இரு போக நெற் செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சிறந்த விவசாயிகளைக் கொண்ட இப்பிரிவில், மேற்படி இருபோக நெற் செய்கைகளின் போதும், குறிப்பாக அறுவடை நெருங்கும் கால கட்டங்களில் காட்டு யானைகளின் தொல்லையால் விவசாயிகள் பெரும் அவலங்களுக்கும், நஷ்டத்திற்கும் உள்ளாகின்றனர். ஏன் உயிரிழப்புக்களைச் சந்திப்பதும் வழக்கமாகவுள்ளது.

இவ்வாறான காட்டு யானைகளின் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கு யானை வேலி அமைத்து, நிரந்தர தீர்வை ஏற்படுத்தித் தருமாறு விவசாயிகள் விடுத்து வரும் கோரிக்கைகள் நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையால் புறந்தள்ளப்பட்டே வருகின்றன.

இந்த நிலைமையை நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லதீபின் கவனத்திற்கு நிந்தவூர் விவசாயிகள் கொண்டு வந்தமையுடன்,

அவரது எண்ணக்கருவிற்கும், தலைமை ஆலோசனைக்கும் அமைய இந்த யானைத் தொல்லையிலிருந்து தமது விவசாயத்தைப் பாதுகாப்பதற்கென நிரந்தர வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவும் முன்வந்துள்ளனர்.

குறிப்பாக பிரதேச செயலாளரின் நெறிப்படுத்தலில் நிந்தவூரிலுள்ள 14 விவசாய அமைப்புக்கள் ஒன்றிணைந்ததும் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.நசீல் தலைமையிலுமான செங்கற்படை ஆற்று விவசாயிகள் சம்மேளனம் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதன்படி முதற்கட்டமாக நிந்தவூர் விவசாயக் கண்டங்களுக்குள் காட்டு யானைகள் புகும் பாதையான சாவாறு வடிச்சல் முதல் ஆத்தியடி கட்டு வரையான மூன்றரைக் கிலோமீற்றர் தூரத்திற்கு யானை வேலி அமைப்பதற்கான யானை பாதுகாப்பு வேலி அமைக்கும் வேலைகள் நிறைவுபெறுமென எதிர்பார்ப்பதாகவும், இதற்கென ஒலுவில் பிரசேதத்திலிருந்து மின்சார இணைப்பு பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் பிரதேச செயலாளர் சட்டத்தரணி லதீப் தெரிவித்தார்.

அரச உதவியற்ற மக்கள் பங்களிப்புடனான (விவசாயிகள்) இத்திட்டம் வெற்றிகரமாக அமைய முன்னின்று உழைத்த

**முதற்கட்டமாக நிந்தவூர் விவசாயக் கண்டங்களுக்குள் காட்டு யானைகள் புகும் பாதையான சாவாறு வடிச்சல் முதல் ஆத்தியடி கட்டு வரையான மூன்றரைக் கிலோமீற்றர் தூரத்திற்கு யானை வேலி அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முழுக்கவும் நிந்தவூர் விவசாயிகளின் நிதிப்பங்களிப்புடன் இத்திட்டத்தை முதற்கட்டமாக நிறைவு செய்யவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய யானையிலிருந்து பாதுகாப்பதற்கான இந்த வேலைத்திட்டத்திற்கென 65 லட்சம் ரூபா நிதியை விவசாயிகளிடமிருந்து பெற உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், தற்சமயம் வரை சுமார் 52 லட்சம் ரூபா கிடைத்துள்ளதாகவும் விசாயிகள் சம்மேளன தலைவர் சட்டத்தரணி நசீல் தெரிவித்தார்.

மேலும் திட்டத்தின் பிரதான மையநிலைய கட்டட நிர்மாண வேலைகள் மாலிண்ட திடல் பகுதியில் வைபவரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலும் இருவார காலத்துள் விவசாயிகள் சம்மேளனத்தின், நிந்தவூர் தலைமை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.ஏ.ஹார்லிக், வன ஜீவராசிகள் திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர் தௌபீக் மற்றும் 14 கமக்காரர் அமைப்பினருக்கும் பெரு நன்றி தெரிவிக்கின்றார் எனப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி லதீப் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இவ்வாறான விவசாயிகளின் பங்களிப்புடனான மேற்படி வேலைத்திட்டம் முன்னுதாரணமானதெனப் பல்வேறு தரப்பினரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். அதேவேளை, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். எம்.முஷாரப், இலங்கையிலேயே முன்னுதாரணமான வேலைத்திட்டம் இதுவெனப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விதந்து பாராட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

# போரில் வெற்றி பெற்ற மதகளிப்பில் அறவழி புத்தரை மதவெறியர் ஆக்காதீர்!

## சிவசேனை மறவன்புலவு சச்சிதானந்தன்

அறநெறி வழி நடந்த புத்தரை மதவெறியர் ஆக்காதீர்கள். போரில் வெற்றி பெற்ற மதகளிப்பில், வெற்றியைக் கொண்டாடும் மெய்சிலிர்ப்பில் இலங்கை, சிங்கள புத்த நாடு என்கிறார் படைத்தள பதி சரத் வீரசேகரா.

இவ்வாறு சிவ சேனை மறவன்புலவு க.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு–

படைத்தளபதி சரத் பொன்சேகா போருக்குப் பின் அமெரிக்கா சென்றார். அங்கிருந்து கொக்கரித்தார். இலங்கை சிங்கள புத்த நாடு.

நல்லாட்சி அரசில் சஜித் பிரேமதாசா அமைச்சராக இருந்தார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயிரம் புத்தர் சிலைகளை அமைப்போம் எனக் கொக்கரித்தார்.

கடந்த சில வாரங்களாகவே படைத் தளபதி சரத் வீரசேகரா கொக்கரித்து வருகிறார்.

இலங்கை சிங்கள புத்த நாடு. தீவு எங்கும் புத்தர் சிலைகளை வைப்போம் என்கிறார்.

போரில் வெற்றிக்குப் பின்னால் மத வெறியே வரலாறு.

மைசூரைக் கைப்பற்றினோம். மதுரையைக் கைப்பற்றுவோம் என 725 ஆண்டுகளின் முன் அலாவுதீன் கில்ஜியின் படைத் தளபதி மாலிக் கபூர் அதே மத வெறியுடன் தமிழகம் வந்தான்.

இந்துக் கோயில்களை அழித்தான். அங்குள்ள செல்வங்களைக் கொள்ளையடித்தான்.

தொடர்ந்து அறுபது ஆண்டுகள் தமிழகத்தில் முகமதியர் ஆட்சி. இந்துக் கோயில்கள் இடிந்தன. மசூதிகள் எழுந்தன. இராமநாதபுரத்தின் பெயரே இலாலா பாத் என்று மாறியது.

அயோத்தியில் பல்லாயிரம் ஆண்டுத் தொன்மையான இராமர் கோயிலை 400 ஆண்டுகளுக்கு முன்பு இடித்தவன் பாபர். அங்கே மசூதியைக் கட்டினான்.

பாபர் வழிவந்த அவுரங்கசீப் காசியில் அருள்மிகு விசுவநாதர் கோயிலை முற்றாக அழித்து அங்கே மசூதியைக் கட்டினான்.

போரின் வெற்றியின் பின்னால் கொக்கரிக்கும் முகமதிய மத வெறி, கத்தோலிக்க மத வெறி, புத்த மத வெறி தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

மூன்று மதவெறிப் படைகளுக்கும் தளபதிகளுக்கும் இலக்கு இந்துக்களே.


படைத்தளபதி சரத் வீரசேகரா விதிவிலக்கானவரா?

அலாவுதீன் கில்ஜி, மாலிக் கபூர், பாபர், அவுரங்கசீப் போன்றோர் வரிசையில், போரின் வெற்றியை மத வெறியாக்கிறார். அந்தப் படைத் தளபதிகளைப் போலவே இந்துக்களை நோக்கிக் கொக்கரிக்கிறார் சரத் வீரசேகரா.

450 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் தென்கோடியில், பல்லாயிரம் ஆண்டு பழமையான, பல்லவர் திருப்பணி செய்த, சீனர் கல்வெட்டு எழுதிய, அருள்மிகு தென்னாவர நாயனார் கோயிலை கத்தோலிக்க மத வெறியோடு இடித்தவன் தளபதி தோமை சொயிசா. அங்கே உலூயிசா தேவாலயத்தைக் கட்டினான்.

416 ஆண்டுகளுக்கு முன்பு கத்தோலிக்கத் தளபதி கான்ஸ்டன்டைன் கச்சதீவில் அருள்மிகு கச்சாபகேச்சரர் திருக்கோயிலைத் தரைமட்டமாக்கினான்.

405 ஆண்டுகளுக்கு முன் இந்து அரசின் சங்கிலி மன்னனைத் தோற்கடித்த கத்தோலிக்க படைத்தளபதி இடீவீரா யாழ்ப்பாணத்தில் 400 சைவக் கோயில்களை இடித்தான். அங்கே தேவாலயங்களைக் கட்டுவித்தான்.



மன்னாரில் திருக்கேதீச்சரத்தைத் தடயமே இல்லாமல் முற்று முழுதாக அழித்தான்.

தோமை சொயிசா வழியில், கொன்ஸ்டன்டையின் வழியில் இடி லீவரா வழியில், மத வெறியோடு இந்துக் கோயில்களைத் தாக்கியோர் அழித்தோர் கொக்கரித்தோர் வழியில் போரில் வெற்றி பெற்ற மதகளிப்பில், வெற்றியைக் கொண்டாடும் மெய்சிலிர்ப்பில் இலங்கை, சிங்கள புத்த நாடு என்கிறார் படைத்தளபதி சரத் வீரசேகரா.

வெற்றியும் தோல்வியும் இரவும் பகலும் போல, மாறி மாறி வருவன அறியாரோ படைத்தளபதி சரத் வீரசேகரா?

போரின் வெற்றிக்குப் பின்னால் நிதானமும் பெருந்தன்மையும் மாவீரன் அலெக்சாண்டருக்கு இருந்தது. இலங்கையில் மாவீரன் எல்லாளனுக்கு இருந்தது.

அத்தகைய நிதானமும் பெருந்தன்மையுமே இலங்கையில் புத்தர் கூறிய அன்பையும் அறனையும் அருளையும் அறிவையும் பெருக்கும்.

இலங்கையின் அழிவுக்கான வாயிலாகப் புத்தர் சிலைகளை, புத்த சமயத்தை, புத்தரின் கொள்கைகளை சரத் வீரசேகரா நஞ்சாக விதைக்கிறார். படுதோல்வியையே காண்பார்.–என்றுள்ளது.

# நிதியமைச்சிடம் 200 கோடி ரூபா கோரவுள்ளது சுகாதார அமைச்சு

## அதன் செயலாளர் தகவல்

கொழும்பு, ஓக. 02

அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு சுமார் 200 கோடி ரூபா நிதியை நிதியமைச்சிடம் கோரத் திட்டமிட்டுள்ளது என்று இலங்கை சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த நிதியால் சுமார் 200 வகையான அத்தியாவசிய மருந்துகளை அமைச்சு கொள்வனவு செய்யவுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சிறீ சந்திர குப்தா தெரிவிக்கையில்–

200 கோடி பில்லியன் ரூபா நிதியை நிதியமைச்சிடம் கோர இலங்கை சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தற்போதுள்ள கேள்வி கோரல் நடைமுறைகளின் கீழ் இந்த மருந்துகளை வாங்குவதற்கு குறைந்தது நான்கரை மாதங்கள் ஆகும்.

தற்போதுள்ள அவசர நிலைமையை கருத்தில் கொண்டு இது சாத்தியமில்லை. அவசரகால கொள்முதலின் கீழ் கொள்வனவு செய்தால் ஒன்றரை மாதங்களில் மருந்துகள் கிடைக்கும்.

மேலும் எந்தெந்த மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் குறைவாக உள்ளன என்பதைக் கணக்கிடுவது அதிகாரிகளுக்குக் கடினமாக உள்ளது.–என்றார்.

# டெங்கு நோயின் தாக்கம் நாட்டில் மீண்டும் அதிகரிப்பு

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தகவல்

கொழும்பு, ஓக.02

நாட்டில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 56 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, மேல் மாகாணத்தில் 50 சதவீதமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர், கண்டி, கேகாலை, குருணாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இருந்தும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவிக்கின்றது.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளது.

டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அதிகம் காணப்படுவதால் நோய் பரவும் வீதம் மேலும் அதிகரிக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# உயிர்க்கொடையளித்த தமிழ் அரசியல் கைதிகளின் 'நினைவேந்தல் நாள்' ஆக ஜுலை -25 பிரகடனம்!

ஜுலை -25 ஆம் திகதியை "உயிர்க்கொடையளித்த தமிழ் அரசியல் கைதிகள் நினைவேந்தல் நாள்" ஆக பிரகடனம் செய்வதாக "குரலற்றவர்களின் குரல்" அமைப்புத் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சாவைத் தழுவிய தமிழ் அரசியல் கைதிகள் நினைவேந்தல் நிகழ்வு குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் – குருநகர் புதுமை மாதா தேவாலயத்திற்கு அருகாமையில் உள்ள "குரலற்றவர்களின் குரல்" பணியிடத்தில் அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தலைமையில்






நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இது தொடர்பில் குரலற்றவர்களின் குரல் அமைப்பினரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைச் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் சாவைத் தழுவிய தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கையும் காரணங்களும் காலத்திற்கு காலம் வேறுபடுகின்றன.

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்றவற்றின் கீழ் சந்தேகத்தின் பெயரில் பால்,வயது வேறுபாடின்றி கைதுசெய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள், இனத்தின் பெயரில் வஞ்சிக்கப்பட்டு சிறைப்படுத்தப்பட்டவர்களாவர்.

இவ்வாறு சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் நூற்றுக்கணக்கானவர்கள் திட்டமிடப்பட்ட சிறைக் கலவரங்களாலும் நோய் வாய்ப்பட்ட நிலையில் போதிய மருத்துவ பராமரிப்பின்றியும் சிறையின் நான்கு சுவர்களுக்குள்ளேயே நீதியின்றிப் பரிதாபகரமாக கொல்லப்பட்டுள்ளார்கள்.

1983ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட ஜுலைக் கலவரத்தின் போது, வெலிக்கடை சிறையின் அதியுயர் பாதுகாப்புப் பிரிவுக்குள் தடுத்துவைக்கப்பட்டிருந்த குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உட்பட்ட 54 தமிழ் அரசியல் கைதிகள் அரசின் கைக்கூலிகளால் சிறைக் கொட்டடிகளுக்குள்ளேயே கதறக் கதறக்கொன்றொழிக்கப்பட்டார்கள்.

அதேபோன்று, 1987 இல் பூசா தடுப்புமுகாமில் 9 தமிழ் அரசியல் கைதிகளும், 1997 இல் களுத்துறை சிறையில் 5 தமிழ் அரசியல் கைதிகளும் கொடூரமாகச் சாகடிக்கப்பட்டார்கள்.

2001 ஆம் ஆண்டில் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் மீது இனவெறி கொண்ட காடையர்கள் நடத்திய மிருகத்தனமான தாக்குதலில் 27 தமிழ் அரசியல் கைதிகள் வெட்டியும் குத்தியும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

2012 இல் வவுனியா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் சிறையதிகாரிகளாலும் விசேட அதிரடிப் படையினராலும் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவை மட்டுமல்ல, யுத்த காலங்களில் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள், நீண்டநெடுங்காலமாக கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், இவர்களில் பலர் உடல்,உள தாக்கங்களாலும் போதிய மருத்துவம் மற்றும் போஷாக்கான உணவின்மையாலும் நோய் நொடிகளுக்கு ஆளாகி சிறைக்குள் சாவடையும் பெருந்துயரம் அண்மைக் காலம் வரை இடம் பெற்றுக் கொண்டு தானிருக்கிறது.

இவ்வாறு நீண்டு செல்கின்ற சிறைக்கொடுமைகளின் பட்டியலில், அங்க இழப்புகளுடனும் விழுப்புண்களுடனும் தப்பிப் பிழைத்து, இப் பூமிப் பந்தின் எங்கோர் மூலையில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எவ்வாறாயினும், ஓர் இனச் சமூகத்தின் பெயரில் சிறையிலடைக்கப்பட்டு வஞ்சகமாகக் கொல்லப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நினைவுகூரப்பட்டு தமிழர் எம் வரலாற்றாவணங்களில் இவர்களது சம்பவங்களும் சாவுகளும் சான்றாதாரங்களாகப் பொறிக்கப்பட வேண்டும்.

அந்த வகையில், "குரலற்றவர்களின் குரல்" அமைப்பானது, ஆண்டுதோறும் வருகின்ற ஜுலை 25 ஆம் திகதியை "உயிர்க்கொடையளித்த தமிழ் அரசியல் கைதிகள் நினைவேந்தல் நாள்" எனப் பிரகடனம் செய்து அதற்கான பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது. – என்று உள்ளது.

# ஐ.தே.கவின் மாநாடு செப்ரெம்பர் 10 இல்

கொழும்பு, ஓக.02

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 10ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

வருடாந்த மாநாட்டை ஏற்பாடு செய்வதற்கு பல குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சி மாநாட்டுக்கு முன்னர் 80 தேர்தல் கிளைகளை மறுசீரமைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்று குழுவுக்கு அறிவித்துள்ளார்.

135 தேர்தல் கிளைகளின் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார ஏற்கனவே அறிவித்துள்ளார்.

# இலுப்பைக்குளம் விபசார நிலையம் சுற்றிவளைப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்குளம் பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் இயங்கி வந்த விபசார நிலையமொன்றைப் பிரதேச மக்கள் சுற்றிவளைத்தனர்.

அங்கு விபசாரத்தில் ஈடுபட்டவர்கள் எனக் கூறப்படும் இரு பெண்கள், மக்களால் பிடிக்கப்பட்டு, தம்மிடம் ஒப்படைக்கப்பட்டனர் என உப்புவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒப்படைக்கப்பட்ட இரு பெண்களும் 25 மற்றும் 30 வயதுடையவர்கள் எனவும் அநுராதபுரம், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் உப்புவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரையும் திருகோணமலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# யாழ் பிரிமியர் லீக் உதைபந்தாட்டம் மிகவும் விறுவிறுப்பான கட்டத்தில்!

## அரை இறுதியில் சென் நிக்கிலஸை வீழ்த்தியது குருநகர் பாடும்மீன் வி.க.

*A one media* வின் ஒருங்கிணைப்பில் வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் சக்தி ரி.வியுடன் இணைந்து நடத்தும் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட பிரிமியர் லீக் சுற்றுப் போட்டியின் விறுவிறுப்பான அரையிறுதி ஆட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

இத் தொடரின் முதலாவது அரையிறுதி ஆட்டம் நேற்று துரையப்பா விளையாட்டு மைதானத்தில் பெரும் எண்ணிக்கையான ரசிகர்கள் கூட்டத்தின் மத்தியில் நடைபெற்றது. நாவாந்துறை நிகலஸ் கழகம் , குருநகர் பாடும்மீன் அணியை எதிர்கொண்டது. விறுவிறுப்பான இந்தப் போட்டியில் பாடும்மீன் கழகம் சென் நிக்கலஸ் கழகத்தை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

இன்று புதன்கிழமை நாவாந்துறை சென் மேரிஸ் கழகம் மற்றும் இளவாலை யங் ஹென்ரிஸ் அணிகள் மோதவிருக்கின்றன



# இன்றைய ராசி பலன்கள் - 02.08.2023




இன்று நீங்கள் நம்பிக்கை நிறைந்து காணப்படுவீர்கள். உங்களின் கடின முயற்சி மூலம் வெற்றி பெறுவீர்கள். புதுமையாக யோசித்துப் புதிய கருத்துக்களை உருவாக்க இது உகந்த நேரம்.

பணி நிமித்தமான பயணம் செய்ய நேரிடும். உங்கள் பணிகளில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள். சிறப்பகத் திட்டமிட்டு உங்கள் பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையான உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இந்த உணர்வால் இன்று நல்லிணக்கமும் திருப்தியும் காணப்படும்.

இன்று பணம் சேமிப்பதற்குச் சாதகமான நிலை காணப்படும். இன்று நல்ல வாய்ப்புகள் காணப்படுவதால் கணிசமான தொகை வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று உங்களது ஆற்றல் சிறப்பாக இருக்கும். இதனால் முழுமையான ஸ்திரமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய நாள் சுமாராக இருக்கக் காண்பீர்கள். நீங்கள் விரும்பிய பலனை அடைய சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். உங்கள் இலக்குகளை எளிதாக அடைவது சிறிது கடினமாக இருக்கும்.

உங்கள் பணிகள் சுமூகமாக நடைபெற மற்றும் பணியில் நற்பலன் காண உங்கள் புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும்.

உங்கள் மனதில் சில குழப்பங்கள் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும். எனவே பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இன்று சற்று இறுக்கமான நிதிநிலைமை காணப்படும். குழந்தைகளின் நலன் போன்ற அதிகரிக்கும் பொறுப்புகளுக்கு செலவு செய்ய நேரும்.

இன்று சளி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. நீங்கள் தைரியமாக நேர்மறை எண்ணத்துடன் இருக்க வேண்டும். உணர்ச்சிவசப்படாமல் இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். எந்த விடயத்தையும் நட்பு முறையோடு அணுக வேண்டும்.

கவனக்குறைவு காரணமாகப் பணியில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. முறையாக திட்டமிட்டு கவனமாக பணியாற்றவும்.

உங்களின் இனிமையான அணுகுமுறை மூலம் உங்கள் நாளை நீங்கள் சிறப்பாக மாற்ற வேண்டும். உங்கள் துணையுடன் அன்பை வளர்க்க முயலுங்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் குடும்பத்துக்காகத் தேவையற்ற செலவு மேற்கொள்ள வேண்டியிருக்கும். இது உங்களுக்குக் கவலையளிக்கும்.

உங்கள் கண்களில் கவனம் தேவை. பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் நண்பர்கள் மற்றும் பரிச்சயமானவர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் நண்பர்களை மகிழ்விப்பீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் உங்கள் மீது நல்ல அபிப்பிராயம் ஏற்படும்.

உங்களது சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். நிதி நிலைமை செழிப்பாக இருக்கும்.

உங்களது சந்தோசமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணபடும்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்கக் காண்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். பக்தியில் ஈடுபடுவதற்கும் இறை வழிபாட்டுக்கும் உகந்த நாள். கடின உழைப்பின் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். உங்கள் திறமைகளைப் பணியிடத்தில் நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உறவை உருவாக்க முடியும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் தேவைப்பட்டால் கடன் பெறலாம்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். எனவே ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் ஆறுதல் தேடிக் கோவிலுக்குச் செல்வீர்கள். இன்றைய நாள் சீராகச் செல்ல நீங்கள் சற்று விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். பிரார்த்தனை மேற்கொள்வது ஆறுதல் அளிக்கும்.

உங்கள் பணிகளை உரிய முறையில் மேற்கொள்ளத் திட்டமிட்டுச் செயல் புரிய வேண்டும். பணியில் கெட்ட பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாகப் பணிகளைக் கையாள வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இத்தகைய உணர்வை தவிர்த்து மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் காணப்படும். உங்கள் மதிப்பு வாய்ந்த பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது அவசியம்.

நீங்கள் பல் வலியால் அவதிப்பட நேரலாம். இனிப்பான உணவு வகைளை உண்ணாமல் இருப்பதன் மூலம் பற்களில் கவனம் செலுத்துவது சிறந்தது.




இன்று நீங்கள் ஓய்வாக இருக்க வேண்டிய நாள். மகிழ்ச்சியை அளிக்கும் சூழ்நிலை இருந்தாலும் நீங்கள் அமைதியின்றிக் காணப்படுவீர்கள். இது உங்களைப் பாதிக்கும். நல்ல பலன்களைக் காண மகிழ்ச்சியாகவும் நம்பிக்கையுடனும் இருங்கள்.

பணியிடத்தில் ஸ்திரமான சூழல் இருக்காது. பணியின்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பான உணர்வுகளை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இன்றைய நாளை இனிமையாக மகிழ்ச்சியாக வைத்திருக்க இது மிகவும் அவசியம்.

இன்று பணம் எளிதில் கிடைக்காது. பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்புக் குறைவு.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியம் சிறக்கும்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். உங்கள் இலக்குகளை அடைவதற்கு இன்று கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களின் இனிமையான தொடர்பாடல் திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு உள்ளது. பயணம் அல்லது வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு உள்ளது. உங்கள் சுய வளர்ச்சிக்கு இன்றைய நாளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று சமநிலையான மன நிலையில் காணப்படுவீர்கள். உங்களது இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையின் இதயத்தில் இடம் பெறுவீர்கள்.

பண வரவு அபரிமிதமாக இருக்கும். நீங்கள் பயனுள்ள விடயங்களுக்கும் குடும்பத்துக்கும் பணம் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் ஆரோக்கியமும் ஆற்றலும் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.08.2023




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். உங்களின் எதிர்மறை சிந்தனை காரணமாக நீங்கள் பாதகமான விளைவுகளைச் சந்திப்பீர்கள். பிரார்த்தனை மற்றும் தியானம் நல்ல பலனளிக்கும்.

பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது.

உங்களிடம் மனக் குழப்பம் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க இத்தகைய உணர்வைத் தவிர்க்க வேண்டும்.

உங்கள் விருப்பங்கள் நிறைவேற இன்று உகந்த நாள் அல்ல. நிதி வளர்ச்சியில் கட்டுப்பாடு காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




நீங்கள் நன்மை அடைந்தாலும் அதில் உங்களுக்கு திருப்தி இருக்காது. வெறுமையை உணர்வீர்கள். இன்று உங்கள் இலக்குகளை அடைவதில் தடைகள் காணப்படும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதைக் கடினமாக உணர்வீர்கள். பணிகளைக் குறித்த நேரத்தில் மேற்கொள்வதிலும் தாமதம் காணப்படும்.

உறவில் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் புரிந்துணர்வில் பிரச்சினை காணப்படும்.

நிதி நிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. அதிர்ஸ்டம் உங்களுக்குச் சாதகமாக இல்லாத காரணத்தால் பண வரவு காணப்படாது.

மன உளைச்சல் காரணமாக இன்று நீங்கள் தொடை வலியால் அவதிப்பட நேரலாம்.




நீங்கள் பாதுகாப்பின்மை உணர்வுடனும் தனிமையாகவும், அவநம்பிக்கையுடனும் காணப்படுவீர்கள். நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம்.

இன்று அதிக பணிகள் காணப்படும். முன் கூட்டியே திட்டமிட்டுப் பணி புரிவதன் மூலம் சிறந்த பலன் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உங்கள் கருத்துகளை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. மருத்துவச் செலவுகாக நீங்கள் கூடுதல் பணம் செலவு செய்ய நேரிடும்.

இன்று நீங்கள் ஆரோக்கியத்தில் கவனம் கொள்ள வேண்டியது அவசியம். மூட்டுக்களில் திடீர் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்குக் கவலையை ஏற்படுத்தும்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் இலக்குகளை அடைவதற்கு அதிர்ஸ்டம் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும். அது உங்களுக்கு மனநிறைவை அளிக்கும். மூத்தவர்கள் மற்றும் நலம் விரும்பிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். உங்களின் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

இன்று உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் வாழ்க்கை பற்றி உங்கள் துணையிடம் கலந்தாலோசிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் நண்பர்களிடமிருந்து எதிர்பாராத பரிசாக பணம் கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்களின் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence


S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPAR JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# கிரேன் விபத்து: 16 பேர் பலி!

இந்தியாவின் மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அதிவேக வீதி ஒன்றுக்கான கட்டுமானப் பணிகளின் போது கிரேன் எனப்படும் பாரம் தூக்கி இயந்திரம் ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் விபத்தில் காயமடைந்த 3 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மேலும் 5 பேர் இடிபாடுகளில் சிக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

காணாமல் போயுள்ளவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் இடம் பெறுவதாக மீட்பு பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மதுரையில் முதன்முறையாக பேரீச்சம் பழம் பயிர்செய்கை!



இந்தியாவில் மதுரையில் முதல்முறையாக பேரீச்சம் பழம் பயிர்செய்கையில் ஈடுப்பட்டு விவசாயி ஒருவர் பாரிய விளைச்சலை பெற்றுள் ளார். மதுரை சிக்கந்தர் சாவடியைச் சேர்ந்தவர் 47 வயதான மு.மூவேந்திரன் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து, பின்னர் விருப்ப ஓய்வு பெற்று விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார்.

மதுரை - அலங்கா நல்லூர் அருகே இடையபட்டியில் தனக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலத்தில் இயற்கை முறையில் பேரீச்சம் பழம் பயிரிட்டு 4 ஆண்டுகளின் பின், தற்போது அறுவடை செய்யத் ஆரம்பித்துள்ளார்.

இது தொடர்பில் குறித்த மு.மூவேந்திரன் தெரிவிக்கையில் ,

ஓய்வுக் காலத்தில் நிரந்தர வருவாய் ஈட்டும் வகையில் அதிக பராமரிப்பில்லாத விவசாயம் செய்ய முடிவெடுத்தேன். வளைகுடா நாடுகளில் வேலை பார்த்த எனது சகோதரர் ஒருவர் கொடுத்த ஆலோசனையின் பேரில் பேரீச்சம் பழம் பயிர் செய்ய முடிவு செய்தேன்.

திருப்பூர் மாவட்டம், அவினாசியில் திசு வளர்ப்பு முறையில் உருவாக்கப்பட்ட பேரீட்சை மரக்கன்றை தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 95 மரக்கன்றுகள் வாங்கி நாட்டினேன். 25 இற்கு 25 அடி இடைவெளியில் நாட்டியுள்ளேன்.

ஆடு, மாட்டுச்சாணம் என இயற்கை உரங்களை மட்டுமே இட்டு வளர்த்து வருகிறேன். தற்போது மூன்றரை ஆண்டுகள் முடிந்த நிலையில் பேரீட்சை நன்கு விளைந்து அறுவடைக்கு வந்துள்ளது. ஆண் மரங்கள் 5, பெண் மரக்கன்றுகள் 90 நாட்டியுள்ளேன்.

கிளிகள் மற்றும் பறவைகளால் சேதம் ஏற்படாமல் இருக்க வலைகளை போர்த்தி பாதுகாத்துள்ளேன் என குறிப்பிட்டுள்ளார்.

# 13 லட்சம் பெண்கள் மாயம்!

இந்தியாவில் இரண்டரை லட்சத்திற்கு மேற்பட்ட சிறுமிகள் உள்ளிட்ட 13 லட்சத்திற்கு மேற்பட்ட பெண்கள் காணாமல் போயுள்ளனர் என்ற விடயம் அம்பலமாகியுள்ளது.

2019 முதல் 2021 வரையிலான மூன்று ஆண்டுகளில் இந்தியாவில் 13.13 லட்சத்துக்கும் அதிகமான சிறுமிகள் மற்றும் பெண்கள் காணாமல் போயுள்ளனர்.

இவ்வாறு காணாமல் போயுள்ளவர்களில் பெரும்பாலானோர் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், அதற்கு அடுத்த இடத்தில் மேற்கு வங்கம் இருக்கிறது.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய உள்துறை அமைச்சகத்தின் தரவுகளின்படி, நாடு முழுவதும் 2019 முதல் 2021 வரை 18 வயதுக்கு மேற்பட்ட 10,61,648 பெண்களும், அதற்குக் குறைவான வயதுடைய 2,51,430 பெண்களும் காணாமல் போயுள்ளனர். இதற்கமைவாக குறித்த 3 ஆணடுகளில் 13 லட்சத்து 13 ஆயிரத்து 81 பெண்கள் காணமல் போயுள்ளனர்.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தால் இந்தத் தரவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. மத்தியப் பிரதேசத்தில் 2019 முதல் 2021 வரை 1,60,180 பெண்களும், 38,234 சிறுமிகளுமாக ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 414 பெண்கள் காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உக்ரைன் ட்ரோன் தாக்குதல்கள்: சுட்டுவீழ்த்தும் ரஷ்யா படை!

ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோ நகரிலுள்ள கட்டடமொன்றில் இன்று இரண்டாவது தடவையாகவும் த்ரோன் எனப்படும் ஆளில்லா சிறியரக விமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மொஸ்க்வா சிட்டி கொம்பிளக்ஸ் கட்டடம் நேற்று மீண்டும் ட்ரோன் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக அந்தப் பகுதி மேயர் சேர்ஜி சோபியானின் தெரிவித் துள்ளார்.

எனினும் உக்ரைனின் பல ட்ரோன்களை ரஷ்ய படையினர் சுட்டுவீழத்தியுள்ளதாகவும், ஒரு த்ரோன் மேற்படி கட்டடத்தை தாக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, நேற்றுமுன்தினம் நடந்த தாக்குதலின் பின்னர், யுத்தமானது ரஷ்யா பிராந்தியத்துக்கு திரும்பும் என





உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி கூறியுள்ளார்.

இதேவேளை, உக்ரைனின் கிறைவ்யி றிஹ் நகரில் ரஷ்யா நேற்று நடத்திய ஏவுகணைத் தாக்குதலில், 10 வயது சிறுமி உட்பட அறுவர் பலியானதுடன் மேலும் 75 பேர் காயமடைந்துள்ளனர் என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

# ஹொங்கொங்கில் உயிரிழந்த பிரான்ஸ் நாட்டு சாகச வீரர்!



ஹொங்கொங்கில் உயரமான கட்டடத்தின் 68 ஆவது மாடியில் இருந்து வீழ்ந்து பிரான்ஸ் நாட்டு சாகச வீரர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ரெமி லுசிடி எனும் 30 வயதானவர் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள உயரமான கட்டடங்கள் மற்றும் பாலங்கள் மீது ஏறி சாகசம் செய்து வந்தார்.

இதனால் சமூக வலைத்தளங்களில் அவரை பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது.

இந்நிலையில், ரெமி கடந்த வாரம் ஹாங்காங்கில் உள்ள 68 மாடிகளைக் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டடத்திற்கு சென்றுள்ளார்.

அங்குள்ள பாதுகாவலர்களிடம் 40 ஆவது மாடியில் உள்ள தன்னுடைய நண்பரை பார்க்கப் போகிறார் எனக் கூறி உள்ளே சென்றுள்ளார்.

இதுபற்றி, நண்பர் என கூறிய வரிடம் பாதுகாவலர்கள் தகவல் தெரிவித்துள்ளனர். ஆனால், ரெமியை தனக்கு தெரியாது என அவர் கூறியுள்ளார். இதையடுத்து, பாதுகாவலர் ஒருவர் ரெமியை தேடிச் சென்றுள்ளார்.

அதற்குள் கட்டடத்தின் உச்சிக்கு சென்றுவிட்டார் ரெமி. அங்கிருந்து சாகசம் செய்தபோது, தவறி வீழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று அவரது உடலை கைப்பற்றியுள்ளனர். பின்னர் அங்கிருந்த சி.சி.ரி.வி காட்சிகளை ஆய்வு செய்துள்ளனர்.

அதில், கட்டடத்தின் வெளிப்பக்கம் சிக்கிக்கொண்ட ரெமி ஜன்னலை தட்டி உதவி கோருகிறார். அந்த வீட்டில் இருந்தவர்கள் வருவதற்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 91 குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை!

அவுஸ்ரேலியாவில் முன்னாள் குழந்தைகள் பராமரிப்பாளர் ஒருவர் 91 குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


அவுஸ்ரேலியாவில் குழந்தைகளை பராமரிக்கும் பொறுப்பில் இருந்த ஒருவர், 91 குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார்.

இது தொடர்பாக வெளியான தகவல் உலக நாடுகளில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

45 வயது நபரான இவர், அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல இடங்களிலுள்ள குழந்தை பராமரிப்பு மையங்களில் பணி புரிந்து வந்தி ருக்கிறார். சிட்னி, பிரிஸ்பேன் மற்றும் வெளிநாடுகளில் உள்ள 12 வெவ்வேறு குழந்தை பராமரிப்பு மையங்களில் இந்தக் குற்றச் சம்பவங்கள் நடந்தன என ஆஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்திருக் கின்றனர்.

91 குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த வழக்கில், 2022 ஆம் ஆண்டு இவர் கைது செய்யப்பட்டார். இதையடுத்து இவரின் வீட்டை சோதனை செய்தபோது, பல திடுக்கிடும் தகவல்கள் வெளி யாகயுள்ளன.

அவர் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதை காணொலியாக எடுத்து வைத்து, அதை இணையதில் பரப்பினார் எனவும் கூறப்படுகிறது. மேலும் இது தொடர்பாக 4,000 படங்களும், காணொலிகளும் கிடைத்துள்ளன என என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949